**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II,**

**Tindivanam.**

**CASE NO.CC. 78/2020**

**Prosecution witness – PW – 6**

| | | | |
|---|---|---|---|
| Date | 12.02.2026 | Calling | |
| Name | சசிகுமார் | Religion | |
| Father/Husband Name | சீனிவாசன் | Age | 49 |
| Village/City | ஒலக்கூர் காவல் நிலையம் | Caste. | |
| Taluka. | | | |

A1 to A4 absent. 317 Cr.P.C.Petition filed and allowed.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை.**

1. இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 27.05.2020 இரவு 8.00 மணி என்றால் சரிதான். இவ்வழக்கில் மறுநாள் 1.30 மணி அளவில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 8 கிலோமீட்டர் இருக்கும். சம்பவ இடத்திற்கு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 22 கிலோமீட்டர் இருக்கும். எங்கள் சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்த பிறகுதான் நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால் 14.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். பார்வை மகசர் சாட்சிகள் இரண்டு நபர்களிடம் நான் விசாரணை

செய்தேன் என்றால் சரிதான். அவர்களைத் தவிர சம்பவ இடத்தில் வேறு யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் லோகநாயகி என்பவரை விசாரணை செய்துள்ளேன். நான் சொல்வது போல் லோகநாயகி என்பவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. லோகநாயகி என்பவர் புகார்தாரரின் மனைவி என்றால் சரிதான். நான் அவர்களை தவிர வேறு நபர்கள் யாரையும் சம்பவ இடத்தில் விசாரணை செய்யவில்லை என்றால் சம்பவ இடத்தில் அவர்கள் மூன்று நபர்கள் தான் இருந்தார்கள். வரைபடத்தில் சம்பவ இடமானது புகார்தாரருடைய வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவருடைய வீட்டின் எதிரில் ஆகும். சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதம் புகார்தாரருடைய வீட்டு வாசலில் இருந்து தான் எடுத்தேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் வீட்டு வாசலில் இருந்து எந்தப் பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்தும் எந்த பொருளையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது புகார்தாரரின் வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் தான் எதிரிகள் உடைய வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் காசி அம்மாள் வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. புகார்தாரர் வீட்டிற்கு கிழக்கு திசையில் உள்ள காசிஅம்மாள் வீட்டிற்கும் இடைப்பட்ட இடத்தில் தான் ஆயுதத்தை நான் கைப்பற்றியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் மூன்றாவது அட்டவணையில் புகார்தாரர் சக்திவேல் இடமிருந்து தான் ஆயுதத்தை கைபற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள வீட்டில் உள்ள நபர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரணை செய்யவில்லை என்றால் விசாரணை செய்யும் போது அங்கு யாரும் இல்லை. புகார்தாரரை இரும்புராடல் அடித்ததாக தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் கைப்பற்றுதல் மகசரில் இரும்பு ராடை கைப்பற்றியதாக தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது இரும்பு கடப்பாறை என்றாலும் கடப்பாறையும் இரும்புராடும் வெவ்வேறு பொருட்கள் என்றாலும் நீதிமன்றத்தில் இரும்பு ராடு தான் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் சாட்சிகளை சம்பவிடத்தில் வைத்து தான் விசாரணை செய்தேனா என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தேன் மருத்துவமனையில் இருந்தவரை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தேன். நான் விசாரணை செய்ததற்கு பின்னிட்டு மீண்டும் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்றால் அன்றைய தேதியிலேயே விசாரணை செய்தேன். நான் எவ்வாறு மருத்துவமனையில் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் லேப்டாப் மூலம் பதிவு செய்தேன். நான் லேப்டாப் மூலம் தான் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்ற விவரத்தை எனது முதல் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திலும் லேப்டாப்பில் தான் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். மருத்துவர் தனது வாக்குமூலத்தில் எதிரிகள் ஆறு நபர்கள் தன்னை இரும்பு ராடு மற்றும் கட்டையால் தாக்கியதாக தன்னிடம் புகார்தாரர் சொன்னதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விவரம் தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காயச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. புகாரில் நான்கு நபர்கள் அடித்ததாக தான் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். மருத்துவரிடம் ஆறு நபர்கள் தாக்கியதாக புகார்தாரர் சொல்லிவிட்டு புகாரில் நான்கு நபர்கள் தாக்கியதாக சொல்லி உள்ளதை பொறுத்து நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தே நான்கு நபர்கள் என்று தான் சொன்னார். 09.10.2020 அன்றுதான் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக அதில் முத்திரை உள்ளது என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்து 134 நாட்கள் காலதாமதமாக இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் விநாயகம் அவர்கள் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் வழக்கு

பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையுடன் புகாரையும் வழக்காவணங்களின் இதர நகல்களையும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த பிறகு அதிகாரிகளுக்கும் என்று சொல்லி உள்ளார் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததற்கு பின்னிட்டு எனக்கு வழக்காவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் இரண்டும் ஒரே நேரத்தில் தான் அனுப்பி வைக்கப்பட்டது. நான் உண்மையிலேயே சம்ப இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் மருத்துவமனை சென்று புகார்தாரரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் புகார்தாரர் முன்விரோதத்தின் அடிப்படையில் கொடுத்த புகாரின் பேரில் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமலும் தவறாக ஒரு வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் அதன் அடிப்படையில் தவறான இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

6. நான் உண்மையிலேயே சம்பவ இடம் சென்று இருந்தால் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்திருப்பேன் என்றாலும் புகாரில் சொல்லி உள்ள ஆயுதங்களையும் கைப்பற்றி இருப்பேன் என்றாலும் அவ்வாறு நான் சென்று விசாரணை செய்யாத காரணத்தினால் தான் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் இந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இது பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்படும் அதை தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.